1995 ஏப்ரல் 3]

191—

கும்பகோணத்தில் கூட்டுறவு சர்க்கரை ஆலை அமைத்தல்

***22413—திரு. இராம. இராமநாதன்:**

மாண்புமிகு தொழில்துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) தஞ்சாவூர் மாவட்டம், கும்பகோணத்தில் கூட்டுறவு சர்க்கரை ஆலை அமைக்கும் செயற்குறிப்பு அரசிடம் உள்ளதா?

(ஆ) ஆம் எனில், எப்பொழுது அமைக்கப்படும்?

மாண்புமிகு திரு. ம. சின்னசாமி, தொழில் துறை அமைச்சர் : மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே,

(அ) இல்லை

(ஆ) இக் கேள்விக்கு இடமில்லை.

திரு. இராம. இராமநாதன்: மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, தமிழகத்தில் தொழிற்புரட்சியாக தொழில் துறையிலே புதிய பொற்காலம் காணும் நம்முடைய தமிழ்த்தாய், மக்களையும் அவர்களுடைய அமோக ஆதரவை மட்டுமே நம்பி, சூதுமதியாளர்களின் சூழ்ச்சியை முடியறித்துக் கொண்டிருக்கின்ற (மேசையைத் தட்டும் ஒலி) நம்முடைய தெய்வத்தாய், தனக்கென்று தனிப் பாதையை வகுத்து தனித் தன்மையோடு இன்றைக்கு தன்னிகரற்ற நிரந்தர முதல்வராய் விளங்கிக் கொண்டிருக்கின்ற எதையும் தாங்குகின்ற இதயம் படைத்திருக்கின்ற நம்முடைய ஒப்பற்ற முதல்வர், நாங்கள் நித்தமும் வணங்கிக் கொண்டு இருக்கின்ற கடவுளாக இருக்கின்ற டாகடர் புரட்சித்தலைவி அவர்களுடைய புனிதமான இந்த நல்லாட்சியில் இன்றைக்கு மாண்புமிகு அமைச்சர் அவர்கள் 'இல்லை' என்கின்ற பதிலை கொடுத்து இருக்கிறார்களேயொழிய, ஆனால், உண்மையான நிலையிலே அவர் 'இல்லை' என்று சொலலமாட்டார் என்று நான் கருதுகிறேன். எனவே, நம்முடைய மாண்புமிகு அமைச்சர் அவர்கள் மீண்டும் இதனைப் பரிசீலித்து, இன்றைக்கு தஞ்சை மாவட்டத்திலேயே மக்கள் தொகையால், பொருளாதாரத்தினுடைய தனித் தன்மையால், தொழில் அமைதியிலேயும் சிறந்து விளங்கிக்கொண்டு இருக்கின்ற கும்பகோணம் பகுதியிலே நிச்சயமாக ஒரு சர்க்கரை ஆலையைக் கூட்டுறவு முறையில் அமைத்துக் கொடுப்பதற்கு ஆவன செய்வார்களா என்பதனை நான் கேட்டு, மீண்டும் அதைப் பரிசீலனை செய்து அவர்கள் அறிவிப்பார்களா என்று அறிய விரும்புகிறேன்.

[1995 ஏப்ரல் 3

முற்பகல் 10-45

மாண்புமிகு திரு. ம. சின்னசாமி: மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, சட்டமன்றத்தில் உண்மை நிலையைத் தான் சொல்ல வேண்டும். தஞ்சை மாவட்டத்தில் ஏற்கெனவே குருங்குளம் என்னுமிடத்தில் கூட்டுறவு சர்க்கரை ஆலை ஒன்று இயங்கி வருகிறது. அதைப்போலவே திரு ஆரூரான் சர்க்கரை ஆலை யூனிட் நம்பர் 2, தஞ்சை மாவட்டம், பாபநாசம் வட்டம், திருமண்டங் குடியில் இயங்கி வருகிறது. நாகை-காயிதே மில்லத் மாவட்டத்தைப் பொறுத்தவரையில் நடிப்பிசைப் புலவர் கே.ஆர். இராமசாமி அவர்களுடைய திருப்பெயரில் ஒரு கூட்டுறவு சர்க்கரை ஆலை மயிலாடுதுறையில் இருக்கிறது. அதுமட்டுமல்லாமல் திரு ஆரூரான் சர்க்கரை ஆலை யூனிட் நம்பர் 1, வடபாதிமங்கலத்திலிருந்து இப்போது நன்னிலம் வட்டம், கொல்லு மாங்குடியில் மாற்றியமைக்கப்பட்டுள்ளது.

(மாண்புமிகு பேரவைத் தலைவர் தலைமை)

மேலும், தஞ்சை மாவட்டத்தைப் பொறுத்தவரையில் அரிசி உற்பத்தியை அதிகமாக செய்கிற மாவட்டமாக இருப்பதால் மேலும் கரும்பு பயிரிடும் பகுதியை நாம் விரிவாக்கம் செய்ய வேண்டுமா என்கிற நிலையையும் பரிசீலிக்க வேண்டியிருக்கிறது. எனவே, அந்தச் சூழ்நிலையினை மனதில் கொண்டு பார்க்கிறபோது கும்பகோணம் அருகில் மேலும் ஒரு புதிய சர்க்கரை ஆலை அமைக்கும் சாத்தியக்கூறுகள் இல்லையென்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன். இப்போது தஞ்சை மாவட்டத்தில் திருவிடைமருதூரில் ஒரு சர்க்கரை ஆலை அமைக்க வேண்டுமென்று தனியார் ஒருவருக்கு தமிழக அரசு பரிந்துரை செய்து மத்திய அரசினுடைய பரிசீலனையில் இப்போது இருந்து வருகிறது. அதற்கு விரைவில் உரிமம் கிடைக்கும் என்ற நம்பிக்கை தமிழக அரசுக்கு இருக்கிறது.

திரு. இராம. இராமநாதன்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, நம்முடைய மாண்புமிகு அமைச்சர் அவர்கள் திருவிடைமருதூர் பகுதியில் இதை அமைப்பதற்கான சாத்தியக்கூறுகள் இருக்கிறது என்று சொன்னார்கள். அவருக்கு என்னுடைய கனிவான நன்றியைத் தெரிவித்துக் கொண்டு, திருவிடைமருதூர் ஒன்றியத்தில் கும்பகோணம் சட்டமன்றத் தொகுதியைச் சார்ந்திருக்கிற பகுதியும் வருகிறது. எனவே, அந்தப் பகுதியில் இதை அமைப்பதற்கான நடவடிக்கையை எடுப்பார்களா என்பதை நான் அறிய விரும்புகிறேன். இன்றைக்கு கரும்பு விவசாயிகளுக்கு எல்லாம் அதிகமான தொகை கொடுத்து, கரும்பு விவசாயிகளுடைய

பொற்காலமாக இன்றைக்கு ஆட்சி நடத்தி வருகிற தமிழகத்தினுடைய நிரந்தர முதல்வர் டாக்டர் புரட்சித்தலைவி அவர்களுடைய நல்லாட்சியில் இன்றைக்கு நெல் பயிரிடுபவர்கள் எல்லாம் நாங்கள் இந்த முதல்வர் அவர்கள் ஆட்சியில் கரும்பையே பயிர் செய்யலாமா என்று நினைக்கிற அளவுக்கு சாதனை செய்து கொண்டிருக்கிற இந்த நல்ல வேளையில் மாண்புமிகு அமைச்சர் அவர்கள் திருவிடைமருதூர் பகுதியில் கும்பகோணம் சட்டமன்ற தொகுதிக்கு உட்பட்ட பகுதியில் இந்த ஆலையை நிறுவுவதற்கு ஆவன செய்வார்களா என்பதை அறிய விரும்புகிறேன். ஆவன செய்வார்கள் என்ற நம்பிக்கையையும் நான் தெரிவித்துக் கொண்டு, செய்வார்களா என்பதை அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. ம. சின்னசாமி: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இதை, தனியார் ஒருவருக்கு, ஆரூரான் சர்க்கரை ஆலை என்போருக்கு இந்த ஆலைக்கான அனுமதி கொடுக்க வேண்டுமென்று தமிழக அரசு மத்திய அரசுக்கு பரிந்துரை செய்திருக்கிறது. மத்திய அரசு அதைப் பரிசீலித்துக் கொண்டிருக்கிறது. அனுமதி கிடைத்த பிறகு எந்தப் பகுதியில் அமைக்க வேண்டுமென்று பின்னாலே முடிவு செய்யப்படும் என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன். அப்போது மாண்புமிகு உறுப்பினர் அவர்களுடைய கோரிக்கையை அரசு நிச்சயமாகப் பரிசீலிக்கும் என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: வினா எண் 192, திரு.வே. பெரியசாமி, மாண்புமிகு சமூகநலம் மற்றும் கைத்தறித் துறை அமைச்சர்.

192—

பட்டுநூல் தட்டுப்பாட்டை நீக்க நடவடிக்கை

***37030**—*திரு. வே. பெரியசாமி:*

மாண்புமிகு சமூகநலம் மற்றும் கைத்தறித்துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

பெரியார் மாவட்டம், பவானி, சத்தியமங்கலம் வட்டங்கள் கைத்தறியின் மூலம் சிறந்த பட்டு, சைனா சீகோ சேலைகளை நவீன முறையில் உற்பத்தி செய்யும் பகுதியாக உள்ளபடியால், இத்தொழிலில் ஈடுபட்டுள்ளவர்களுக்கு தொழில் செய்ய பட்டு நூல் கிடைக்காமல் இருப்பவர்களுக்கு உதவ அரசு நடவடிக்கை எடுக்குமா?

மாண்புமிகு திருமதி இரா. இந்திரகுமாரி, சமூக நலம் மற்றும் கைத்தறித்துறை அமைச்சர்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,